**IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.**

O.S.No.142/2022

Deposition of Witness for PW1.

Name : திரு. ஷாஜிமோன்
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.02.2026.

<u>சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.</u>

<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் வாதியின் மகன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன்.

01.08.2005 தேதியிட்ட ஜார்ஜ் மற்றும் 5 பேர் எழுதிக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் அசல் வா.சா.ஆ.1. 02.08.2013 தேதியிட்ட வினோத் பங்கிராஜ் எனது தாயாருக்கு எழுதிக் கொடுத்த விலைப்பத்திரம் அசல் வா.சா.ஆ.2. எனது மாமி (எனது தகப்பனாரின் சகோதரி) செலின் மேரியின் இறப்பு சான்றிதழ் ஒளி நகல் வா.சா.ஆ.3. வழக்கு பட்டிகை சொத்தை காட்டும் புகைப்படங்கள் 5 எண்ணம் வா.சா.ஆ.4 ன் வரிசை. எனக்கு எனது தாயார் எழுதிக் கொடுத்த பொது அதிகாரப்பத்திரம் அசல் வா.சா.ஆ.5. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.1 மற்றும் 2 வா.சா.ஆ.6.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.